**சார்பு நீதிமன்றம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை- திருமதி.S.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி,

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் புதன்கிழமை

**வாரிசுரிமை அசல் மனு எண்.01/2023**

(CNR No. TNTM23000927/2023

1. மா. நேசம்மாள்
2. பெ. மாசானம்
3. சி. ஜான்சிராணி
4. சி. சரண்யா ....... மனுதாரர்கள்

//எதிர்//

1. பொது மேலாளர்,

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (வி) லிட்,

திருவண்ணாமலை மண்டலம்,

திருவண்ணாமலை மாவட்டம்.

2. செல்வராணி .......எதிர்மனுதாரர்கள்

இவ்வழக்கு 24.02.2026 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.K.அன்பரசு, அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராமல் தோன்றாதரப்பினராக கருதப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. அசோக், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

**உத்தரவு**

காலம் சென்ற **மா. சிவலிங்கம்** என்பவரின் இறப்பு பலன்களில் மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது என விளம்புகை செய்து மனுதாரர்கள் பெயருக்கு வாரிசுரிமை சான்று வழங்கி உத்தரவிட கோரி இந்திய வாரிசுரிமைச்சட்டம் 1925 பிரிவு 372-ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

2.1) 1ம் எதிர்மனுதாரரான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (வி) லிமிடட்டின் கீழ் இயங்கும் திருவண்ணாமலை மண்டல பணி மனையின் இயங்கி வரும் ஆரணி பணிமனையில் தொழில்நுட்ப பணியாளராக பணிபுரிந்தவர் M. சிவலிங்கம் என்றும், 2ம் எதிர்மனுதாரர் (லேட்) சிவலிங்கம் என்பவருக்கு எந்த விதமான சட்ட ரீதியான தொடர்போ சம்மந்தமோ இல்லாதவர் என்றும், மேற்படி சிவலிங்கம் என்பவரின் இறப்பு சம்மந்தமாக அவரின் இறுதி தீர்வில் தமக்கும் பங்குண்டு என சட்டவிரோதமாக உரிமை கோரும் நபராவார் என்றும், மேற்படி 3ம் மனுதாரருக்கும் மா.சிவலிங்கம் என்பவருக்கும் கடந்த 04.07.1999 ஆம் வருடம் வந்தவாசி வட்டம், திண்டிவனம் சாலையில் உள்ள V.A. அருணாச்சலம் முதலியார் பாலாம்பாள் திருமண சத்திரத்தில் இருவீட்டாரின் ஒப்புதலோடு நல்லமுறையில் திருமணம் நடைபெற்றதாகவும், அவர்களுக்கு சரண்யா என்ற மகள் பிறந்த பிறகும் அனைவரும் நல்லமுறையில் வாழ்ந்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர்கள் உறவு முறையில் சிவலிங்கம் ஆரணி பணிமனையில் தொழில்நுட்ப பணியாளரான பணி எண். TR 21047 ல் நல்லமுறையில் பணிபுரிந்து வந்தபோது கடந்த 14.03.2015 ல்

உடல்நலக்குறைவு காரணமாக பணிமனையிலேயே மயங்கி விழுந்ததைத் தொடர்ந்து சிவலிங்கத்தை ஆரணி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது இறந்துவிட்டதாக தெரிவித்ததாகவும், மேற்படி சிவலிங்கத்தின் இறப்புசான்றில் 1 மற்றும் 2 ம் மனுதாரர்களின் முகவரி குறிப்பிட்டு ஆரணி நகராட்சி அலுவலகத்தால் இறப்பு சான்று வழங்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்டுள்ளார்.

2.2) மேற்படி சிவலிங்கம் என்பவர் பணிபுரிந்த மாவட்ட அலுவலகம் திருவண்ணாமலை மண்டல போக்குவரத்துக்கழக அலுவலக ஆவணத்தில் S.R. புக்கில் மனுதாரர்கள் 3 மற்றும் 4 மனுதாரர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மேற்படி சிவலிங்கம் பணிபுரிந்த பணிக்கு கிடைக்க வேண்டிய பணப்பயன்கள் முழுமையும் சம்பள நிலுவைத்தொகை மற்றும் ஈமக்காரியைத் தொகை கருணை அடிப்படையில் கிடைக்கவேண்டிய வாரிசுக்கான வேலை 3 ம் மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய பென்ஷன் ஆகியவைகளை கிடைக்கப்பெற்றால் தான் மனுதாரர்கள் அனைவரும் நல்லமுறையில் வாழ்க்கை நடத்தமுடியும் என்றும், 4 ம் மனுதாரரின் கல்விக்கும் அவர் தந்தையார் இறப்பின் பயன் முழுத்தொகையும் கிடைக்கப்பெற்றால் மேற்படிப்புக்கு பேருதவியாக இருக்கும் என்பதால் கீழ்கண்ட ஆவணங்களுடன் மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர் அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதம் அதை தொடர்ந்தும் நேரில் அணுகியபோது மனுதார்களிடம் 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தின் மூலமாக (Succession Certificate) வாரிசு உரிமை சான்று பெற்று அளிக்குமாறு கடந்த 05.10.2018 ல் எதிர்மனுதாரர் கடிதம் மூலம் மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டது என்றும், குறிப்பிட்டுள்ளார்.

2.3) 1ம் எதிர்மனுதாரர் பணிமனையின் கீழ் இயங்கிவரும் ஆரணி பணிமனையில் சிவலிங்கம் TR 21047 ல் தொழில்நுட்ப பணியாளராக பணியில் இருக்கும்போது இறப்பின் பயனை மனுதாரர்கள் கோரினால் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து மனுதார்களுக்கு சேரவேண்டிய பணப்பயன்களை கொடுக்காமலும் காலம் கடத்தி வருவதுடன் வாரிசு சான்று பெற்று வருமாறும் 1ம் எதிர்மனுதாரர் காலம் கடத்தி வருகிறார் என்றும், எனவே அதன் அடிப்படையில் மனுதாரர்களுக்கு வாரிசுரிமை சான்றிதழ் வழங்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரையின் சுருக்கம்.-

3.1) உண்மைநிலை என்னவெனில் 3ம் மனுதாரருக்கும் சிவலிங்கம் என்பவருக்கும் திருமணம் நடைபெற்று 3ம் மனுதாரர் கர்ப்பமாகி அவருடைய தாய்வீட்டிற்கு பிரசவத்திற்கு சென்றதாகவும், சிவலிங்கம் என்பவருக்கும் 3ம் மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்ற நாளிலிருந்தே தன்னுடைய கணவர் குடிக்காரன் என அடிக்கடி பிரச்சனை செய்துகொண்டு, சரிவர வாழாமல் பிரசவத்திற்கு தாய்வீடு சென்ற 3ம் மனுதாரர் குழந்தை பிறந்த பின்பும் சிவலிங்கம் என்பவருடன் வாழ வரவில்லை என்றும், அதேபோல் சிவலிங்கம் என்பவரின் இறப்பிற்கு கூட 3ம் மனுதாரர் கலந்து கொள்ளவில்லை என்றும், மேலும் சிவலிங்கம் என்பவர் தன்னுடைய மனைவியான 3ம் மனுதாரர் அவரைவிட்டு பிரிந்து சென்றுவிட்டதால், மிகவும் பாதிக்கப்பட்டு குழந்தையை கூட பார்க்கவிடாமல் இருந்ததால், ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில்

இருந்து வந்துள்ளதாகவும், 2ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரும் 2ம் மனுதாரரும் இலங்கையில் ஒன்றாக பணிபுரிந்து வந்ததாகவும், 2ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் நடந்து இரண்டு பெண் குழந்தைகள் பிறந்த பின்னர் அவருடைய கணவர் சேகர் என்பவர் இரண்டாவது குழந்தை பிறந்து அந்த குழந்தை ஒரு வயதாக இருக்கும்போது வீட்டைவிட்டு காணாமல் போய்விட்டதாகவும், அவ்வாறு 2ம் எதிர்மனுதாரரின் கணவர் சேகர் என்பவர் கடந்த 1995ம் வருடத்தில் காணாமல் போய்விட்டதாகவும், அவர் எங்கு வசித்து வருகிறார் என தெரியவில்லை என கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

3.2) பின்னர் சிவலிங்கம் என்பவர் 2ம் எதிர்மனுதாரரிடம் தன்னுடைய மனைவி ஜான்சிராணி என்பவர் தன்னை திருமணம் செய்து கொண்டு சரிவர இல்வாழ்க்கை செய்யாமல் பிரசவத்திற்காக தாய்வீடு சென்றவர் மீண்டும் வாழவில்லை எனவும், குழந்தையை கூட பார்க்க அனுமதிக்கவில்லை என்றும், தற்போது குடும்பம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருவதாகவும், 2ம் எதிர்மனுதாரரிடம் தாங்களும் தங்களுடைய கணவரை பிரிந்து இரண்டு பெண் குழந்தைகளுடன் யாருடைய ஆதரவும் இல்லாமல் வசித்து வருகின்றீர்கள், அதனால் 2ம் எதிர்மனுதாரரையும் குழந்தைகளையும் தானே பராமரித்து வருவதாக தெரிவித்ததின் பேரில் இருவீட்டாரின் உறவினர்கள் பேசி முடிவு செய்து சிலநாட்கள் கழித்து சிவலிங்கம் என்பவர் 2ம் எதிர்மனுதாரரையும், 2ம் எதிர்மனுதாரரின் குழந்தைகளையும், பண்ருட்டியில் இருந்து அழைத்துக்கொண்டு வந்து குடும்பம் நடத்தியதாகவும், இந்தநிலையில் சிவலிங்கம் என்பவர் சென்னைக்கு சென்று அங்கிருந்து தான்

ஆரணி பணிமனைக்கு வேலைக்கு சென்று வந்தநிலையில் கடந்த 13.03.2015 தேதியன்று இரவு சுமார் 8.00 மணியளவில் வேலைக்கு சென்றவர் மறுநாள் 14.03.2015 தேதியன்று காலை 8.00 மணியளவில் திடீரென மயக்கம் ஏற்பட்டு பின்னர் ஆரணி அரசு மருத்துவமனையில் சேர்த்து அவரை பரிசோதித்த மருத்துவர்கள் சிவலிங்கம் இறந்துவிட்டதாக தெரிவித்ததாகவும், இதனால் ஆரணி நகர காவல் நிலைய குற்ற எண்.81/2015 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

3.3) 2 ம் எதிர்மனுதாரர் சிவலிங்கம் என்பவருடன் 2002 ம் வருடத்தில் திருமணம் செய்து கொண்டு குழந்தைகளுடன் செய்யாறு டவுன், கீழ்புதுப்பாக்கம் விரிவு பகுதி, பி.டி.உஷா தெருவில் வசித்து வந்து சிவலிங்கம் இறப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்பு சிவலிங்கமும், 2 ம் எதிர்மனுதாரரும், குழந்தைகளும் சென்னை - மேடவாக்கத்திற்கு சென்று குடும்பம் செய்துவந்தநிலையில், பணியிலிருந்தபோதே சிவலிங்கம் இறந்துவிட்ட பிறகு அவரது இறுதி சடங்கு மற்றும் ஈமக்கிரியைகளை 2 ம் எதிர்மனுதாரரை வைத்து முடித்துக்கொண்டு தற்போது 2 ம் எதிர்மனுதாரரையும், குழந்தைகளையும், மனுதாரர்கள் ஒன்றாக சேர்ந்து கொண்டு சிவலிங்கத்தின் அனைத்து பணப்பயன்களை அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், மேற்சொன்ன உண்மைநிலைகளை மறைத்து 2 ம் எதிர்மனுதாரர் யார் என்றே தெரியாது என தன்னுடைய மனுவில் தெரிவித்து இந்த பொய்யான மனுவினை தாக்கல் செய்துள்ளதால் சட்டப்படி இந்த மனு செல்லத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

4. இம்மனுவில், மனுதாரர் நேசம்மாள், ம.சா.1 ஆகவும், ம.சா.2 ஆக மாசானம் என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள், மனுதாரர் ம.சா.1 தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 7 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா-1 ஆக செல்வராணி மற்றும் எ.ம.சா.2 ஆக ஜெகதீசன், என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

5. **மனுதாரர் மனுவில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்று தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.**

காலம் சென்ற **மா. சிவலிங்கம்** என்பவரின் இறப்பு பலன்களில் மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது என விளம்புகை செய்து மனுதாரர்கள் பெயருக்கு வாரிசுரிமை சான்று வழங்கி உத்தரவிட கோரி இந்திய வாரிசுரிமைச்சட்டம் 1925 பிரிவு 372-ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் இறந்துபோன சிவலிங்கம் என்பவர் 1, 2 மனுதாரர்களின் மகன் என்றும், 3 ம் மனுதாரரின் கணவர் என்றும், 4 ம் மனுதாரரின் தந்தை என்றும் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி சிவலிங்கம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் கீழ் இயங்கும் திருவண்ணாமலை மண்டல பணிமனையில் இயங்கி வரும் ஆரணி பணிமனையில் தொழில் நுட்ப பணியாளராக பணிபுரிந்து வந்தார் என்றும், 2 ம் மனுதாரருக்கும், மேற்படி சிவலிங்கத்திற்கும் எந்தவிதமாக சட்டரீதியான சம்மந்தமும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். மேலும், சிவலிங்கம் என்பவருக்கும், 3 ம் மனுதாரருக்கும்

கடந்த 04.07.1999 ம் தேதியன்று வந்தவாசி வட்டம், திண்டிவனம் சாலையில் உள்ள V.A. அருணாச்சலம் முதலியார் பாலாம்பாள் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றதாகவும், அவர்களின் இல்வாழ்க்கையின் பயனாக சி.சரண்யா என்ற மகள் பிறந்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர். கடந்த 14.03.2015 தேதியன்று ஆரணி பணிமனையில் சிவலிங்கம் பணியில் இருந்தபோது உடல்நலக்குறைவு காரணமாக மயங்கி விழுந்ததை தொடர்ந்து அவரை ஆரணி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர். மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் சிவலிங்கத்தின் பணிப்பலன்கள் குறித்து அணுகிய போது 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தின் மூலமாக வாரிசுரிமை சான்று பெற்று வரும்படி கடந்த 05.10.2018 அன்று கடிதம் மூலம் மனுதாரர்களுக்கு தெரிவித்துள்ளார். மேலும் 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு யார் என்றே தெரியாது என்றும், 2ம் எதிர்மனுதாரருக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்று தற்போது கணவருடனும், இரண்டு பெண் குழந்தைகளுடனும் வாழ்ந்து வருகிறார் என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரர் சட்டப்படியான நபர் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். எனவே சிவலிங்கத்திற்கு சேரவேண்டிய பணிப்பலன்களை பெறுவதற்கு வாரிசுரிமை சான்றிதழ் வழங்க வேண்டும் என்று கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**6. இம்மனுவில் 1ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராகியுள்ளார்.**

**7.)** 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் சிவலிங்கம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழத்தில் பணிபுரிந்தது குறித்தும், அவர் இறந்தது குறித்தும் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் மேற்படி சிவலிங்கம் 3 ம் மனுதாரரை திருமணம் செய்து சரண்யா என்ற பெண் குழந்தை பிறந்த பின்னிட்டு பிரசவத்திற்கு தாய் வீட்டிற்கு சென்ற 3 ம் மனுதாரர் சிவலிங்கத்துடன் சேர்ந்து வாழவரவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் 2 ம் எதிர்மனுதாரரின் கணவர் சேகர் என்பவர் கடந்த 1995 ம் ஆண்டு காணாமல்போன பின்னிட்டு அவர் தனது இரண்டு பெண் குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தபோது ஒரு உறவினர் திருமணத்தில் சிவலிங்கம் என்பவர் அவரை சந்தித்து அதன் பின்னிட்டு சிவலிங்கமும் 2 ம் எதிர்மனுதாரரும் அவரது குழந்தைகளும் செய்யார் டவுன் கீழ்புதுப்பாக்கம் விரிவு பகுதியில் உள்ள பி.டி.உஷா தெருவில் வாடகைக்கு வீடு எடுத்து குடும்பமாக வசித்து வந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். 2002 வருடத்திலிருந்து சிவலிங்கமும், 2 ம் எதிர்மனுதாரரும் செய்யாறு டவுனில் திருமணம் செய்து கொண்டு வசித்து வந்தபோது ஒருநாள் கூட 3 ம் மனுதாரர் தன்னுடைய குழந்தையுடன் வந்து சிவலிங்கத்தை பார்த்தது இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் சிவலிங்கம் இறந்த பின்னிட்டு 2 ம் மனுதாரரான மாசானம் என்பவர் முதல் தகவல் அறிக்கையில் தன்னுடைய மகனான சிவலிங்கம் என்பவர் 2 ம் மனுதாரரை திருமணம் செய்து கொண்டு மகள்கள் மெர்லின் சந்திரலேகா, ஜாக்குலின் ஜெசிகா என்பவர்களுடன் வந்தவாசியில் உள்ள கெஜலட்சுமி நகரில் குடியிருப்பதாக தான் குறிப்பிட்டுள்ளார். மேலும் சிவலிங்கம் இறந்ததற்கான அனைத்து இறுதி

சடங்குகளையும் 2ம் எதிர்மனுதாரர் தான் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே இறந்த சிவலிங்கத்தின் மனைவி என்ற முறையில் 2ம் எதிர்மனுதாரருக்கும் ஓய்வு ஊதிய தொகையில் உரிய தொகையை கொடுக்கவேண்டும் என்று 2ம் எதிர்மனுதாரர் மாவட்ட ஆட்சியரிடம் கடந்த 29.08.2016 அன்று மனு தாக்கல் செய்துள்ளார். இறந்த சிவலிங்கத்தின் பணிப்பயன்களை தாங்கள் மட்டுமே அடைய வேண்டும் என்ற கெட்டத் நோக்கத்துடன் தான் மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே 2ம் எதிர்மனுதாரரும் இறந்துவிட்ட சிவலிங்கத்தின் மனைவி என்பதால் அவரையும் சட்டப்படியான வாரிசாக சேர்த்து உத்தரவிட வேண்டும் என்று 2ம் எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில் தெரிவித்துள்ளார்.

8.) மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிப்பதற்கு 1ம் எதிர்மனுதாரரான நேசம்மாள் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் தான் இறந்த சிவலிங்கத்தின் தாயார் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் ம.சா.1 மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. ம.சா.ஆ.1 ஆவணம் 04.07.1999 தேதியிட்ட சிவலிங்கம் மற்றும் ஜான்சிராணிக்கு நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் ஆகும். ம.சா.ஆ.2 ஆவணம் 05.10.2018 தேதியன்று 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரான செல்வராணி என்பவர் சிவலிங்கத்தின் பணிபலன்களில் உரிமை கோருவதால் இந்நீதிமன்றம் மூலமாக வாரிசு உரிமை சான்றிதழ் பெற்றுவரும்படி அறிவுறுத்தி அனுப்பிய கடிதமாகும். ம.சா.ஆ.3 ஆவணம் 10.12.2015 தேதியிட்ட இறந்துபோன சிவலிங்கத்தின் வாரிசு

சான்றிதழ் ஆகும். ம.சா.ஆ.4 ஆவணம் 14.03.2015 அன்று சிவலிங்கம் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் ஆகும். ம.சா.ஆ.5 ஆவணம் சிவலிங்கம் மற்றும் ஜான்சிராணிக்கு பிறந்த சரண்யா என்ற மகளின் பிறப்பு சான்று மற்றும் பள்ளி மாற்று சான்றிதழ் ஆகும். எனவே ம.சா.ஆ. 1 முதல் ம.சா.ஆ.5 வரையான ஆவணங்களின் மூலம் இறந்த சிவலிங்கத்தின் பெற்றோர்கள் 1 மற்றும் 2ம் மனுதாரர்களான நேசம்மாள் மற்றும் மாசானம் என்றும், இறந்த சிவலிங்கத்தின் மனைவி 3ம் மனுதாரர் ஜான்சிராணி என்றும், இறந்த சிவலிங்கத்தின் மகள் சரண்யா என்றும், மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் இறந்தபோது அவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்தார் என்பதும் மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

9.) மேலும் 2ம் மனுதாரரான இறந்த சிவலிங்கத்தின் தந்தை மாசானம் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் இறந்த சிவலிங்கம் தன்னை திருமணம் செய்துகொண்டு செய்யாரில் வசித்து வந்ததாகவும், எனவே தனது பெயரையும் சேர்த்து வாரிசுரிமை சான்றிதழ் வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே 1 முதல் 4 மனுதாரர்கள் இறந்த சிவலிங்கத்தின் வாரிசுகள் என்பது ஆவணங்களின் அடிப்படையிலும், சாட்சியங்களின் அடிப்படையிலும் தெரியவருகிறது. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி 2ம் எதிர்மனுதாரர் இறந்த சிவலிங்கத்தின் வாரிசா, இல்லையா, என்பதேயாகும். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அவர் எ.ம.சா1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.10 வரையான

ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் எ.ம.சா1 குறுக்கு விசாரணையின்போது ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எ.ம.சா.ஆ.1 ஆவணம் 14.03.2017 அன்று சிவலிங்கம் இறந்தது குறித்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல் ஆகும். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் சிவலிங்கத்தின் தந்தை மாசானம் புகார்தாரராக குறிப்பிடப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது மேற்படி முதல் தகவல் அறிக்கையில் 2ம் மனுதாரரான மாசானமே, மேற்படி சிவலிங்கம், 2ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகள்களுடன் வசித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்று வாதிட்டார். எனவே மனுதாரர்கள் தரப்பிலேயே 2ம் எதிர்மனுதாரர் சிவலிங்கத்தின் மனைவியாக வாழ்ந்து வந்தார் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்று வாதிட்டார். மேலும் 2ம் எதிர்மனுதாரர் இறந்த சிவலிங்கத்தின் பணிப்பயன்களில் தனக்கு உரிமை உள்ளது என்று மாவட்ட ஆட்சியரிடம் தாக்கல் செய்த 29.08.2016 தேதியிட்ட மனுவின் நகல் எ.ம.சா.ஆ.2 ஆகவும், அதற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட ரசீது எ.ம.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் இறந்த சிவலிங்கமும் 2ம் எதிர்மனுதாரர் செல்வராணியும் சேர்ந்து தொடங்கியிருந்த ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் கணக்கு புத்தகம் எ.ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் இறந்த சிவலிங்கத்தின் மருத்துவ ரசீதுகள் எ.ம.சா.ஆ.5 ஆகவும், இறந்த சிவலிங்கம் என்பவரின் சிகிச்சைக்காக 2ம் எதிர்மனுதாரரின் மகள் மெர்லின் சந்திரலேகா அவர் பணிபுரியும் பணி காப்பீட்டு

திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றதற்கான ரசீசின் அசல் எ.ம.சா.ஆ.6 ஆகவும், மேற்படி மெர்லின் சந்திரலேகா என்பவரின் பணிகாப்பீடு திட்டத்திற்கான காப்பீடு அட்டை எ,ம.சா.ஆ.7 ஆகவும் இறந்த சிவலிங்கம் என்பவரின் பெயரில் செய்யார் விலாசத்தில் பெறப்பட்ட எரிவாயு இணைப்பு எ.ம.சா.ஆ.8 ஆகவும், இறந்த சிவலிங்கமும் 2ம் எதிர்மனுதாரரும் அவருடைய மகள்களும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் எ.ம.சா.ஆ.9 ஆகவும், அதற்கான குறுந்தகடு எ.ம.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எனவே 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்களே சிவலிங்கமும், 2ம் எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக வாழ்ந்ததை ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும், எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ. 10 வரையான ஆவணங்களிலிருந்து சிவலிங்கமும், 2ம் எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள் என்பது சந்தேகத்திறக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் ம.சா.1 ஆன இறந்த சிவலிங்கத்தின் தாயார் நேசம்மாள் தன்னுடைய குறுக்கு விசாரணையில் ***"முதல் தகவல் அறிக்கையில் என் மகன் சிவலிங்கம் வந்தவாசியில் கெஜலட்சுமி நகரில் தன் மனைவி செல்வராணி, மகள்கள் மெர்லின் சந்திரலேகா ஜாக்குலின் ஜெசிகா , உடன் வசித்து வந்ததாக கூறியுள்ளார்," என்றும்***, ***"என் மகன் இறுதி சடங்கில் 2ம் எதிர்மனுதாரர் மெர்லின் சந்திரலேகா, ஜாக்குலின் ஜெசிகா ஆகியோர்கள் இருந்தார்கள். இறுதி சடங்கில் 2ம் எதிர்மனுதாரர் தான் உட்கார்ந்து செய்து கொண்டார். ஈமகிரியை 2ம் எதிர்மனுதாரர் செய்தார்"*** என்று சாட்சியமளித்துள்ளார். இதை மறுத்து ம.சா.2 சாட்சியமளித்திருந்தபோதிலும் இறந்த

சிவலிங்கத்தின் தாயாரே 2ம் எதிர்மனுதாரர் தான் இறந்த சிவலிங்கத்தின் இறுதி சடங்குகளை செய்தார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். எனவே இறந்த சிவலிங்கமும் 2ம் எதிர்மனுதாரரும் நீண்ட நாட்கள் ஒன்றாக வசித்து வந்துள்ளனர் என்றும், 2ம் எதிர்மனுதாரர் இறந்த சிவலிங்கத்திற்கான பராமரிப்புகளை செய்துள்ளார் என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறந்த சிவலிங்கம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்ததற்கான ஆவணங்களான ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணங்களில் இறந்த சிவலிங்கத்தின் பணிப்பதிவேடான ம.சா.ஆ.7 ஆவணத்தில் மனைவி என்று 3ம் மனுதாரரையும், மகள் என்று 4ம் மனுதாரரை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். மேலும் இறந்த சிவலிங்கத்திற்கும் அவரது மனைவியான ஜான்சிராணிக்கும் இடையே சட்டப்படியான விவாகரத்து ஏற்பட்டது என்பதற்கு எவ்வித ஆவணங்களும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

**10.)** மேலும் எ.ம.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையின் போது ***"எனக்கு 2 மகள்கள் ஆகும். முதல் மகளின் பெயர் மெர்லின் சந்திரலேகா 2ம் மகள் பெயர் ஜாக்குலின் ஜெசிகா ஆகும்" முதல் மகள் 16.10.1992 அன்றும் 2ம் மகள் 09.10.1994 அன்றும் பிறந்தார்கள். அவர்களது தந்தை சேகர் ஆகும். எனது மகள்கள் சென்னையில் தான் வசிக்கிறார்கள். இருவரும் திருமணமாகி தங்களது கணவருடன் வசிக்கிறார்கள். எனக்கும் சேகருக்கும் விவாகரத்து ஏற்பட்டா, என்றால் இல்லை," என்று சாட்சியமளித்துள்ளார்.*** எனவே சிவலிங்கமும் 2ம் எதிர்மனுதாரரும் கணவன் மனைவியாக ஒன்றாக வசித்து வந்தபோதிலும் சிவலிங்கத்திற்கு

ஏற்கனவே திருமணமாகி சட்டப்படியான மனைவியாக 3ம் மனுதாரரும், 2ம் எதிர்மனுதாரருக்கும் ஏற்கனவே திருமணமாகி அவரது சட்டப்படியான கணவரான சேகர் என்பவரும் இருந்துள்ளனர். சிவலிங்கமும் 2ம் எதிர்மனுதாரரும் முறைப்படி அவர் அவர்கள் சட்டப்படியாக விவாகரத்து பெறாமல் சேர்ந்து வாழ்ந்துள்ளதால் அவர்களிடையே சட்டப்படியான திருமண உறவு இருந்ததாக எவ்வகையிலும் கருத இயலாது. மேலும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த சிவலிங்கமும், 2ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்பதை நிரூபிப்பதற்கு சிவலிங்கத்துடன் பணிபுரிந்த ஜெகதீசன் என்பவர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.2 தன்னுடைய சாட்சியத்தில் சிவலிங்கமும், 2ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்ததாகவே சாட்சியமளித்துள்ளார்.

**11.)** 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் மாண்பமை சென்னை உயர்நீதிமனற்த்தின் முன் தீர்ப்பான 1. Kothandam and others Vs Devamirtham and others dated, 11.03.2021 என்ற தீர்ப்பினை முன்நிறுத்தி இறந்த சிவலிங்கமும் 2ம் எதிர்மனுதாரரும் நீண்டகாலமாக கணவன் மனைவியாக சேர்ந்து வாழ்ந்துள்ளால் 2ம் எதிர்மனுதாரரை மனுதாரரின் மனைவியாக கருத வேண்டும் என்று வாதிட்டார். மேலும் மேற்படி முன்தீர்ப்பில் *“ **Since the Court will have to examine as to how Kasinatha Mudaliar lived with the first respondent, the evidence shows that they lived together as husband and wife. The 60$^{th}$ and 80$^{th}$ birthday were performed in accordance with the Hindu religious rites and ceremonies. The recognisation given by Kasinatha Mudaliar has to be recognised by this Court or there are no materials to hold otherwise and if materials are to be provided, the appellants herein should have provided such materials. They have failed to do so. The Court examines facts***

***and on the basis of the facts, it should be held whether a fact asserted had been proved or disproved or not proved. In the instant case, the petitioner claims such right and one primary document alone, the Registered Will wherein Kasinatha Mudaliar had described herself as wife and had bequeathed property would establish that the Court should bend to maintain that relationship which he had bestowed on her.*"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அவரும் இறந்த சிவலிங்கமும் நீண்டகாலம் கணவன் மனைவியாக வாழ்ந்துள்ள காரணத்தினாலும் அதை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அவர் நிரூபித்துள்ளதாலும், இறந்த சிவலிங்கதிற்கு வழுங்கப்படும் வாரிசுரிமை சான்றிதழில் 2ம் எதிர்மனுதாரரின் பெயரையும் சேர்க்க வேண்டும் என்று வாதிட்டார். எனினும் மேற்சொன்ன முன்தீர்ப்பின் சங்கதிகளும், இவ்வழக்கின் சங்கதிகளும் வேறுபட்டவையாகும். இவ்வழக்கில் இறந்த சிவலிங்கத்தின் முதல் மனைவியான ஜான்சிராணி தற்போதும் உயிருடன் உள்ளார். மேலும் இறந்த சிவலிங்கமே தன்னுடைய பணிபதிவேட்டில் தனது மனைவி என்று 3ம் மனுதாரரின் பெயரையும், மகள் என்று 4ம் மனுதாரரின் பெயரையும் குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்படி முன்தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் இவ்வழக்கிற்கு பொருந்ததாது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே எவ்வகையிலும், 2ம் எதிர்மனுதாரரின் சட்டப்படியான மனைவியாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. நீண்ட காலம் 2ம் எதிர்மனுதாரர் சிவலிங்கத்துடன் வாழ்ந்து வந்திருந்தபோதிலும், அவரை சிவலிங்கத்தின் சட்டப்படியான மனைவியாக கருத இயலாது. எனவே இறந்த சிவலிங்கத்திற்கு வழுங்கப்படும் வாரிசுரிமை சான்றிதழில்

2ம் எதிர்மனுதாரரின் பெயரை சேர்க்க இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**12.)** மேலும் மனுதாரர்கள் இம்மனுவில் 1 முதல் 4 மனுதாரர்கள் இறந்த சிவலிங்கத்தின் வாரிசுகள் என்று வாரிசுரிமை சான்று கோரியுள்ளனர். மேலும் சிவலிங்கத்தின் இறப்பு பலன்களில் மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது என விளம்புகை செய்யவும் கோரியுள்ளனர். 1 முதல் 4 மனுதாரர்கள் இறந்த சிவலிங்கத்தின் வாரிசுகள் என்று கோரியிருந்தபோதிலும் இந்து வாரிசுரிமை சட்டத்தின்படி ஒரு இந்து ஆண் இறந்தால் அவருக்கு அவருடைய தாய், மனைவி மற்றும் பிள்ளைகள் மட்டுமே Class I வாரிசுகள் ஆவார். Class I வாரிசுகள் உள்ள நிலையில் Class II வாரிசான தந்தையை இறந்த நபரின் வாரிசாக கருத இயலாது. எனவே மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் Mould செய்யப்பட்டு இறந்த சிவலிங்கத்தின் பணிப்பலன்களை பெறுவதற்கு 1, 3 மற்றும் 4 மனுதாரர்கள் மட்டுமே இறந்த சிவலிங்கத்தின் வாரிசுகள் என்று வாரிசுரிமை சான்றிதழ் வழங்கவேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>இறுதியாக.-</u>**

மனுதாரர்களின் மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் Mould செய்யப்பட்டு, காலம் சென்ற சிவலிங்கம் அவர்களின் வாரிசுகளாக 1, 3 மற்றும் 4 மனுதாரர்களான நேசம்மாள், ஜான்சிராணி மற்றும் சரண்யா ஆகியோரைக் குறிப்பிட்டு மனுதாரர்களுக்கு வாரிசுரிமை சான்றிதழ் வழங்க உத்தரவிடப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2026.03.18 17:28:53 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> :-**

ம.சா.1 நேசம்மாள் (1ம் மனுதாரர்)

ம.சா.2 மாசானம் (2ம் மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 04.07.1999 | சிவலிங்கம் மற்றும் ஜான்சிராணிக்கு நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் | அசல். |
| ம.சா.ஆ.2 | 05.10.2018 | 1ம் எதிர்மனுதாரர் வழங்கிய கடிதம். | அசல் |
| ம.சா.ஆ.3 | 10.12.2015 | இறந்துபோன சிவலிங்கத்தின் வாரிசு சான்றிதழ் | நகல் |
| ம.சா.ஆ.4 | 14.03.2015 | சிவலிங்கம் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் | அசல் |
| ம.சா.ஆ.5 | -- | சிவலிங்கம் மற்றும் ஜான்சிராணிக்கு பிறந்த சரண்யா என்ற மகளின் பிறப்பு சான்று மற்றும் பள்ளி மாற்று சான்றிதழ் | நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்.-</u>**

எ.ம.சா.1 செல்வராணி (1ம் எதிர்மனுதாரர்)

எ.ம.சா.2 ஜெகதீசன் (2ம் எதிர்மனுதாரர்)

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 14.03.2017 | முதல் தகவல் அறிக்கை. | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 29.08.2016 | மாவட்ட ஆட்சியரிடம் தாக்கல் செய்த மனு. | நகல் |
| எ.ம.சா.ஆ.3 | -- | மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட ரசீது. | கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.4 | -- | ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் கணக்கு புத்தகம் | அசல் |
| எ.ம.சா.ஆ.5 | | இறந்த சிவலிங்கத்தின் மருத்துவ ரசீதுகள் | அசல் |
| எ.ம.சா.ஆ.6 | -- | பணி காப்பீட்டு திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்றதற்கான ரசீது | அசல் |
| எ.ம.சா.ஆ.7 | -- | மெர்லின் சந்திரலேகா என்பவரின் பணிகாப்பீடு திட்டத்திற்கான காப்பீடு அட்டை | அசல் |
| எ.ம.சா.ஆ.8 | -- | இறந்த சிவலிங்கம் என்பவரின் பெயரில் செய்யார் விலாசத்தில் பெறப்பட்ட எரிவாயு இணைப்பு | அசல் |
| எ.ம.சா.ஆ.9 | -- | இறந்த சிவலிங்கமும் 2ம் எதிர்மனுதாரரும் அவருடைய மகள்களும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ.10 | -- | குறுந்தகடு | அசல் |

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.03.18 17:29:05 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.